**கருவலகஸ்வெவ பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

1. **நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 24 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 24 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கருவலகஸ்வெவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்**

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,329,326 ஆல் தேறிய சொத்துக்கள் குறைவடைந்திருந்தன.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

05 கணக்கு விடயங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 53,990,989 ஆக இருந்ததுடன் அப்பயன்பாட்டுப் பதிவேடுகள் பிரகாரமான மீதிகள் ரூபா 53,091,505 ஆக இருந்தமையால் ரூபா 899,484 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டன.

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 52,401,645 ஆக இருந்ததுடன் அதில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்படும் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,284,950 ஆக இருந்தது.

**(ஆ) செலுத்தவேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 54,526,945 ஆக இருந்ததுடன் அதில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வு செய்யப்படாமல் காணப்படும் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 890,810 ஆக இருந்தது.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

07 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 819,226 கூட்டுத்தொகையான பொறுப்பு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் 217 ஆம் விதி | பீ.எஸ் 46 மாத்திரியின் பிரகாரம் பதிவேடொன்றில் சபைக்குச் சொந்தமான அனைத்து காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான விபரங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதி செயலாற்றல்**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,490,368 ஆக காணப்பட்டதுடன் அதற்கு ஒப்பாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,368,661 ஆக காணப்பட்டது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

நிதி விளைவுகளில் ரூபா 4,878,293 ஆன வீழ்ச்சிக்காக மீண்டுவரும் செலவின விடயங்களில் அதிகரிப்பு மற்றும் சபையின் ஏனைய வருமானம் குறைவடைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

**2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்**

மீளாய்வாண்டின் நடைமுறைச் சொத்து விகிதம் 1.05:1 மற்றும் 2015 ஆம் ஆண்டில் அது 1.51:1 ஆக இருந்தது. 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக தொழிற்படு மூலதனத்தில் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

**2.4 வருமான நிர்வாகம்**

**2.4.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வீத வரி வருமான அறவீடு 79 சதவீதமாக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் நிலுவை அறவீடு 55 சதவீதமாக இருந்தது.

**2.3.2 வீதவரி மற்றும் வரி**

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 240,313 தொகையான வீதவரி அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.4.3 குத்தகை வாடகை**

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 107,472 தொகையான குத்தகை வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

2016 ஆம் ஆண்டிற்காக செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 பயன்படுத்தப்படாத மற்றும் விளைவற்ற சொத்துக்கள்**

ரூபா 1,338,227 தொகையான கழிவு முகாமைத்துவ செயற்திட்டம் மற்றும் ரூபா 4,544,050 தொகையான விடுமுறை கேந்திரமும் 02 ஆண்டுகளாக விளைவற்றுக் காணப்பட்டது.

**3.3 திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவும்**

நாளாந்தம் நகரில் கழிவுப் பொருள் சேகரிக்கப்பட்டு திறந்த வெளியில் இடப்படுவதால் வெவ்வேறு சுற்றாடல் பிரச்சினைகள் உருவாகக்கூடிய ஆபத்தொன்று உருவாகியிருந்தது.

**3.4 மனித வளமுகாமைத்துவும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 58 ஆக இருந்ததுடன் உள்ளவாறான பதவியணியினர் 47 ஆக இருந்தன.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருடக் கணக்காக சபை செயலாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது.

(ஆ) பதவியணியில் அபிவிருத்தி உத்தியோகத்தர், சாரதிகள், வேலைத் தொழிலாளர் மற்றும் நூலக உதவியாளர் ஆகிய பதவிக்காக ஒரு உத்தியோகத்தர் வீதம் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த போதிலும் அப்பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

2016 ஆம் ஆண்டில் சபை நிதியத்திலிருந்து 4 நிர்மாண வேலைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 1,700,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதி வரை மதிப்பிடப்பட்ட நிர்மாணங்கள் அல்லாத வேறு 05 நிர்மாணங்களுக்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 1,083,570 செலவிடப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்தது.

**4.2 வருடாந்த பெறுகை திட்டம்**

2016 ஆம் ஆண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை செயற்படுத்துதல்**

மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது எனது கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் பிரதேச சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக மேலும் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) களஞ்சிய கட்டுப்பாடு | இருப்பு பதிவேடு நாளதுவரையாக்குதல் மற்றும் இருப்புக் கட்டுப்பாடு முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம் | சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் நகரில் கழிவுப் பொருள் சேகரிக்கப்பட்டு திறந்த வெளியில் இடப்படுவதால் உருவாகக்கூடிய வெவ்வேறு சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |